



கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம், கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட தலைவர்களின் தலைமையில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பொதுப்பணி, நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு, கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியின் வி.சி.க. வேட்பாளர் முனைவர்,வழக்கறிஞர் கு.மாலதியை அறிமுகம் செய்து வைத்து,தேர்தல் ஆக்கப் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி தோழர்களுக்கு வழங்கினார்கள். மேலும் இந்த மாபெரும் செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர்கள் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ, தா.உதயசூரியன் எம்எல்ஏ மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில நிர்வாகிகள்,மாவட்ட நிர்வாகிகள்,உள்ளாட்சிப் பிரதிநிதிகள்,ஒன்றிய, நகர,பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், தோழர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் போட்டியிட உள்ள

# இறுதி வேட்பாளர்கள் பட்டியல் அறிவிப்பு!

## 4,630 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்!

சென்னை.ஏப்.11-

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் போட்டியிட உள்ள இறுதி வேட்பாளர்களின் பட்டியலை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் மாலை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அதன்படி தமிழகத்தில் இறுதியாக நேற்று முன்தினம் இரவு 10 மணி நிலவரப்படி 4.630 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அதேபோன்று, சுயேச்சை வேட்பாளர்களுக்கு சின்னமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழகத்தில் வருகிற 23ம் தேதி சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 30ம் தேதி தொடங்கி கடந்த 6ம் தேதி வரை நடந்தது.

4 நாட்கள் விடுமுறையான நிலையில் 4 நாட்கள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டது. கடந்த 6ம் தேதி வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாளாகும். முதல் நாளான மார்ச் 30ம் தேதி 573 வேட்புமனுக்களும், 2ம் நாளான கடந்த 2ம் தேதி 1,361 வேட்புமனுக்களும், 3ம் நாளான 4ம் தேதி 3,430 வேட்புமனுக்களும், கடைசி நாளான 6ம்தேதி 7,599 வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. அனைத்து வேட்புமனுக்களையும் கடந்த 7ம் தேதி அந்தந்த தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அதிகாரிகள் பரிசீலனை செய்தனர்.

7,599 வேட்புமனுக்கள் பரிசீலனைக்கு பிறகு முதல்வர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான், தவெக தலைவர் விஜய் உள்ளிட்ட 5,024 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டதாகவும், எடப்பாடி தொகுதியில் தவெக கட்சி வேட்பாளர் உள்ளிட்ட 2,467 வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 108 வேட்புமனுக்கள் திரும்பப் பெறப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. இதை தொடர்ந்து கடந்த 8 மற்றும் 9ம் தேதி காலை 11 மணியில் இருந்து 3 மணிக்குள் வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது.

ஒரு சில சுயேச்சை வேட்பாளர்கள் தங்களது மனுக்களை வாபஸ் பெற்றனர். இதையடுத்து நேற்று முன்தினம் மாலை இறுதி வேட்பாளர்களின் பட்டியலை அந்த தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் வெளியிட்டனர். அதன்படி, தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் போட்டியிட மனு தாக்கல் செய்த 7,599 பேரில் 2,460 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. 509 மனுக்கள் வாபஸ் பெறப்பட்டது. இறுதியாக தமிழகம் முழுவதும் 4,630 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதாக தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அதேபோன்று, சுயேச்சை வேட்பாளர்களுக்கும் சின்னம் ஒதுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. சுயேச்சை வேட்பாளர்கள் ஒரே சின்னம் கேட்டு முறையிட்டால் குலுக்கல் முறையில் சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இறுதி வேட்பாளர் பட்டியலின் அடிப்படையில் தான் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் ஒட்டப்பட வேண்டிய வேட்பாளரின் வண்ணப் புகைப்படம், பெயர் மற்றும் சின்னத்துடன் கூடிய தாள் (பேலட் பேப்பர்) அச்சிடப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஒரு தொகுதியில் 16 பேருக்கு மேல் போட்டியிட்டால் இரண்டு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படும்.

அதன்படி கூடுதலாக ஒவ்வொரு 16 வேட்பாளருக்கும் கூடுதல் இயந்திரம் பயன்படுத்தப்படும். இறுதியில் நோட்டா (யாருக்கும் வாக்களிக்க விரும்பவில்லை) இடம் பெற்றிருக்கும். தமிழகத்தில் தற்போதைய நிலையில், அதிக தொகுதிகளில் கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படும் நிலை உள்ளது. குறிப்பாக தமிழகத்தில் அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 79 பேர் களத்தில் உள்ளனர். அங்கு 108 பேர் வேட்புமனு தாக்கல் செய்த நிலையில், பரிசீலனையின்போது 83 மனுக்கள் ஏற்கப்பட்டது.

நேற்று முன்தினம் 4 பேர் மனுக்களை வாபஸ் பெற்றதை தொடர்ந்து 83 பேர் இறுதியாக களத்தில் உள்ளனர். இதனால், கரூர் தொகுதியில் 5 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளது. அதேபோன்று, குறைந்த பட்சமாக அம்பாசமுத்திரத்தில் 5 வேட்பாளர்கள் மட்டுமே களத்தில் உள்ளனர். அங்கு ஒரு சுயேச்சை வேட்பாளர் கூட இல்லை. உதகை மற்றும் கடலூரில் ஒரு சுயேச்சை உள்ளிட்ட 6 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.



மதச்சார்பற்ற முற்போக்கு வெற்றிக் கூட்டணியின் அவிநாசி சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் மருத்துவர் கோகிலாமணி அன்னூர் வடக்கு ஒன்றியம் பசூர் ஊராட்சியில் பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். உடன் தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கோகுல், ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, அன்னூர் பேரூராட்சி தலைவர் பரமேஸ்வரன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### வீட்டுமனைப் பட்டா, சாதிச்சான்று, மகளிர் உரிமைத் தொகை

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தால் இலட்சக்கணக்கானோர் பயன்!

## திருவண்ணாமலை வாக்குச் சேகரிப்பில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஏப். 11–

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தால், வீட்டுமனைப்பட்டா, சாதிச்சான்று, மகளிர் உரிமைத் தொகை என இலட்சக்கணக்கானோர் பயனடைந்துள்ளனர் என்று திருவண்ணாமலை மாநகராட்சியில் வீதி, வீதியாக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வாக்குசேகரித்தபோது குறிப்பிட்டார். பொதுமக்களும், பெண்களும் ஆரத்தி எடுத்தும், சால்வைகள் அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

10.04.2026 வெள்ளிக்கிழமை காலை 7.00மணிக்கு திருவண்ணாமலை மாகராட்சியில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் பொதுமக்களிடம் வாக்குசேகரித்தலை தொடங்கினார்.

மாவட்ட திமுக அலுவலகம், கணேசபுரம், வேலு நகர், அருணகிரிபுரம், திருக்கோயிலூர் சாலை, திருவள்ளுவர் சிலை, அஜிஸ் காலனி, இராமலிங்கனார் தெரு, திருநாவுக்கரசுத் தெரு, துராபலித் தெரு, பைபாஸ் சாலை, என்.எஸ். சித்ர மகால், வானதராயபாளையத் தெரு, நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கீழ்நாத்தூர் காலனி, வேட்டவலம் ரோடு, விஜயா மால் வரை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வாக்குசேகரித்தார்.

வாக்குசேகரிப்பின்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பொதுமக்களிடையே உரையாற்றும்போது...

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் வீட்டுமனைப் பட்டா, சாதிச்சான்று, முதியோர் உதவித் தொகை, மகளிர் உரிமைத் தொகை என கிடைக்காதவர்கள் இந்த திட்டத்தால் இலட்சக்கணக்கில் பயனடைந்தனர். அடுத்த திராவிட மாடல் ஆட்சியிலும் இத்திட்டம் தொடரும். இந்த பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர்



நீண்ட காலமாக பட்டா கிடைக்காமல் ஏங்கி இருந்தனர். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தால் உங்களுக்கெல்லாம் பட்டா கிடைத்தது. அதுவும் மனு செய்த 30 நாட்களில் கிடைத்தது. இந்த பகுதி மக்களுக்கு கறவை மாடும் வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை நகர மக்களின் நீண்ட நாள் கனவான மாநகராட்சி கனவு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் நனவானது. இது மாநகராட்சி ஆனதால் பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டு, இந்த மாநகரம் வளந்திருக்கிறது

நமது முதல்வர் அண்ணன் ஸ்டாலின் இல்லதரசி திட்டத்தில் ரூ.8ஆயிரம் கூப்பன் கொடுக்கப்படும். உங்களுக்கு தேவையான குளிர்சாதனப் பெட்டியோ, சலவை இயந்திரமோ உங்களுக்கு தேவையானதை வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரமாக உயர்த்தப்படும் என வாக்களித்துள்ளார்.

தமிழர்களை தொடர்ந்து வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவோம், தமிழ்நாடு வெல்லட்டும். இவ்வாறு உரையாற்றினார்.

வாக்குசேகரிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், க.சௌந்தர ராசன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் கே.குணசேகர், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். எம்.சிவக்குமார், சி.பி.ஐ., மாவட்ட செயலாளர் இரா.திருமலை, முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் ஐ.எம்.சுலைமான் கான், விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் நாசர் உசேன், மக்கள் நீதி மைய்யம் மண்டல பொறுப்பாளர் இரா. அருள், மனிதநேய ஜனநாயக கட்சி ஜி.கேட் குமார், எஸ். டி.பி.ஐ.மாவட்ட தலைவர் முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு.ராஜாராம், தமிழக விவசாய தொழிலாளர் பி.வாசு, ஆதித் தமிழர் பேரவை எஸ்.கந்தன், தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா மற்றும் ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர். சந்திரன், த.ரமணன், துணை மேயர் சு.ராஜாங்கம், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### மூத்த ஊடகவியலாளர் ‘தமிழ் கேள்வி’ தி.செந்தில்வேலின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



## தலைமைக் கழக அறிவிப்பு!

| நாள் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 13.04.2026 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 14.04.2026 | தேனி தெற்கு | ஆண்டிபட்டி |
| 15.04.2026 | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி |
| 16.04.2026 | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி |
| 18.04.2026 | காஞ்சிபுரம் தெற்கு | உத்திரமேரூர் |
| 19.04.2026 | சென்னை தெற்கு | சைதாப்பேட்டை |

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள்: 10.04.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி ஒன்றியம் அத்தியூர் கிராமத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், துணை சேர்மன் ஜெயபாலன்,உள்ளிட்ட தோழமைக் கட்சி, திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



திருக்கோவிலூர் தொகுதிக்கு உட்பட்ட திருக்கோவிலூர் நகரத்தில் கழகக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர் கௌதம சிகாமணிக்கு, கழக மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக் நாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்த போது எடுத்தபடம். கழக முன்னணியினர், நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், மூங்கில் துறைபட்டு, பொரசப்பட்டு, பொருவளூர் ஆகிய ஊராட்சியில் வீடு வீடாக பொதுமக்களை நேரில் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார், இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடன் கலந்து கொண்டனர்.




வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ஏ.பி. நந்தகுமார் வேலூர் ஒன்றியம் தெள்ளூர் ஊராட்சி கிராமத்தில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துச் கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் சி.எல். ஞான சேகரன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.